பிரதிக்ஞா

(பரம பூஜனிய ஸ்ரீ மோகன் ஜி பகவத் ஸர்சங்கசாலக்)

தினசரி நாம் ப்ரார்த்தனா பாடுகிறோம். சங்கத்தில் அனைவரும் சேர்ந்து செய்கிற சங்கல்பமாக ப்ரார்த்தனா பாடுகிறோம். சங்கத்தில் முதல் நாளே ஹிந்து ராஷ்ட்ரத்தை பற்றி சொல்வதில்லை. சங்க வேலை என்னுடைய வேலை. அதை செய்வதற்காக நான் ஷாகா போகவேண்டும். மனப்பூர்வமாக நான் இந்த வேலையை செய்ய வேண்டும். வாழ்நாள் முழுவதும் என் உடல் மனம் புத்தி அனைத்தையும் நான் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ப்ரார்த்தனாவில் நாம் என்று தான் அறிமுகப்படுத்துகிறோம். ஆனால் ப்ரதிக்ஞாவில் நான் என்கிறோம். நான் சங்கத்தின் அங்கத்தினன் ஆகிவிட்டேன். சங்கம் என்ன எதிர்நோக்குகிறதோ அதன்படி வேலை செய்கிறேன் என்கிறோம். ப்ரார்த்தனாவைப் போல் தினசரி ப்ரதிக்ஞா சொல்வதில்லை. வாழ்வில் ஒரு முறை தான் பிரதிக்ஞா எடுக்கிறோம்.

நாமெல்லாம் சேர்ந்து செய்யக்கூடியதாக இருப்பதால் ப்ரார்த்தனா சமஸ்க்ருதத்தில் உள்ளது. பிரதிக்ஞா தனித்தனியாக எடுக்கக் கூடிய சங்கல்பம் என்பதால் பிரதிக்ஞா நம்முடைய தாய்மொழியில் தான் இருக்கிறது. அதனால் தான் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு மொழிகளில் பிரதிக்ஞா எடுக்கிறார்கள்.

பிரதிக்ஞா எடுக்கும் போது அனுபவம் வாய்ந்த ஸ்வயம்சேவகர் முன்னிலையில் பிரதிக்ஞா எடுக்கிறோம்.

பிரதிக்ஞா துவங்கும் போது சர்வ சக்தியுள்ள இறைவன் சாட்சியாக வைத்து என்று துவங்குகிறோம். எல்லா இடங்களிலும் இறைவன் இருக்கிறார். அதனால் அவர் நம்மை கண்காணித்துக் கொண்டிருக்கிறார் என்று மட்டும் இல்லை. நாம் நம் முன்னோர்களையும் முன்வைத்து பிரதிக்ஞை செய்கிறோம். உ.ம். பீஷ்மரின் பிரதிக்ஞை, பீமரின் பிரதிக்ஞை, ராணா பிரதாப் சிம்மரின் பிரதிக்ஞை.

ராணா பிரதாப் சிம்மன் சித்தூர் சுதந்திரம் அடையும் வரை நான் தங்கத்தட்டில் சாப்பிட மாட்டேன். கட்டிலில் தூங்க மாட்டேன் என்று அவர் பிரதிக்ஞை செய்தார். ஆகஸ்ட் 15,1947 வரை அவருடைய வம்சம் அந்த பிரதிக்ஞையை கடைப்பிடித்தார்கள். ராமஜென்ம பூமியை மீட்டு வர பிரதிக்ஞை எடுத்தவர்கள் 10-11-2019 வரை செருப்பு போடவில்லை.

எவ்விதமான நிபந்தனையும் இல்லாமல் பிரதிக்ஞை எடுக்க வேண்டும். இந்த புனிதமான ஹிந்து தர்மத்தின் பணியை முழுமையாக செய்ய வேண்டும். சங்கம் நேரடியாக மனித நிர்மாணப் பணியை மட்டுமே செய்யும். ஸ்வயம்சேவகர்கள் எதையும் விட்டு வைக்கமாட்டார்கள்.

ஹிந்து தர்மம் என்பது வெறும் சம்பிரதாயங்கள் மட்டுமல்ல. பல்வேறு விதமான சம்பிரதாயங்களையும் இணைப்பதாக ஹிந்து தர்மம் உள்ளது.

புவியீர்ப்பு விசை மற்றும் சூரியனைப் போன்று நாம் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் இந்த தர்மம் இருக்கும்.

ராஷ்ட்ரத்தின் மேல் அழகாக இல்லை என்றாலும் நாம் அம்மாவின் மீது எப்படி அன்பு காட்டுகிறோமோ அதுபோல் அன்பு காட்டவேண்டும்.

எந்த சூழ்நிலையிலும் நாம் தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும். வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு விதமாக தோன்றும். உதாரணமாக பரசு ராமர் 23 முறை அழிக்கும் வேலையைச் செய்தார். புத்தர் சம்பூரணமான அஹிம்சையை போதித்தார். ராமர் ஏக பத்தினி விரதம்

கடைப்பிடித்தார். கிருஷ்ணருக்கோ 16108 மனைவிமார் இருந்தனர். சூழ்நிலைக்கேற்றாற்போல் நம் தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும். யுகதர்மம் கடைபிடிக்க வேண்டும்.

நம் வேலையைப் போன்று வேறு எந்த வேலையும் இல்லை. அங்கத்தினன் ஆகிவிட்டேன் என்று சொன்னால் சங்கத்தின் உறுப்பினர் என்று பொருள்படாது. சங்கம் எனும் உடலின் செல் போன்ற ஒரு அங்கமாக நான் ஆகிவிட்டேன். சங்கம் இல்லை என்றால் நான் இல்லை என்பது போல இருக்க வேண்டும்.

சங்கப்பணி செய்வதால் நான் பெரிய ஆள் என்று கருதக்கூடாது. சங்கம் தான்பெரியது.

சங்கராச்சாரியார் சொன்னார் இறைவா நீயும் நானும் ஒன்று, ஆனால் நீதான் பெரியவன் என்று அதுபோல் இருக்க வேண்டும்.

தானாஜி வீட்டில் நடந்த திருமணத்தை நிறுத்தி ஸ்வராஜ்ஜியத்திற்காக நின்றார்.

சிவராம் ஜி டோக்லேக்கர் 10 ஆண்டுகள் கழித்து ஊருக்கு சென்று திரும்பிய போது உறவினர் கொடுத்த பணத்தை வேண்டாம் என்று சொன்னார்.

ஸ்வயம்சேவகர் ஒருவர் தன் தந்தை உடல்நலம் சரியில்லாமல் இறந்த போதும் ஷாகா சென்றார்

நான் ஒரு ஜில்லா ப்ரச்சாரக்கால் சங்கத்திற்கு அறிமுகம் ஆனேன். அவர் தன் 99 வயதிலும் சங்க வேலை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் அவருக்கு எந்த போட்டோவும் இங்கில்லை. ஆனால் எனக்கு இவ்வளவு போட்டோ உள்ளது. அதைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை.

உள்ளத்தோடும் சுயநலமற்ற எண்ணத்தோடும் வாழ்நாள் முழுவதும் அனுஷ்டிப்பேன் என்று சொல்கிறோம்.

தந்தை உடல்நலம் சரியில்லாமல் இறந்த போதும் ஷாகா சென்றார். பிரதிக்ஞாவை வாழ்க்கை முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும்.